

**ஆசிரியர் மடல்**

# இயேசுவே மெய்யான ஒளி

அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு,

இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

பத்திரிகையின் 23ம் வருட நிறைவில் நின்று கொண்டிருக்கிறேன். திரும்பிப் பார்க்கிறேன்.கர்த்தருடைய கட்டளையை மீறக்கூடாதே என்ற ஒரே காரணத்தினால் 2000 பிப்ரவரியில் வெறும் இரண்டு தாள் பத்திரிகையாக *( News Letter)* ஆரம்பிக்கப்பட்டு , இன்று 23 – ம் ஆண்டிலே மீண்டும் பழைய வடிவிலே உங்களை முத்தம் செய்கிறது.

இந்த பத்திரிகை ஊழியத்திலே பல இலட்சங்களை விதைத்தோம்.என்ன கிடைத்தது? கஷ்டமும், நஷ்டமும் என்று நான் நினைப்பேனானால் அது மிகவும் தவறு.ஒரு ஆத்துமா மனம் திரும்பும்போது பரலோக இராஜ்யத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டானதாம். இந்த பத்திரிகை ஊழியத்தினால் அநேக பொருளாதார இழப்புகள் இருந்தாலும், அருளப்பட்ட சத்தியத்தினால் ஒரு சில ஆத்துமாக்களாவாது பரலோக வாசலை சமீபித்திருக்கிறது என்று என் ஆவியிலே அதிகமாக உணருகிறபடியால், கஷ்டத்தையும் நஷ்டத்தையுமே ***Regular System*** ஆக்கி கொரோனா பாதிப்பினால் 22 மாதங்கள் நலிந்து போன இந்த பத்திரிகை, மீண்டும் 23 வது ஆண்டிலே, 23 வது மலராக உங்கள் கைகளில் வலம் வருகிறது.இது வளமாக தொடர ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நெகேமியா இரண்டாம் கட்டப்பணி,சில மாதங்களில் ஆரம்பிக்கப்படவேண்டும். ஜெபியுங்கள்.உதவிக்கரங்களை நீட்டுங்கள்.ஒரு குடும்பத்திதற்கு 10,000/= ( பத்தாயிரம் )என்று நியமித்திருக்கிறோம். அநேக கரங்கள் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே இதை முடித்துவிடலாம். ஒருவருக்கொருவர் ஊக்கமாய் ஜெபிப்போம் .

**கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்**

**பாஸ்டர் S. போஸ்கோ .**

**ஆண்டு சந்தா ரூ 100 / =**

**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**


**& 9283443230 (True Light Ministries)**

**Bank Transfer :**

**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**

**Our Website : www.truelightmission.org**

***17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .***





# உடன்படிக்கை



**"கர்த்தருடைய உடன்படிக்கையையும், அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்கிறவர்களுக்கு அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்"** *(சங்கீதம் 25 : 10).*

சரி, உடன்படிக்கை என்றால் என்ன? கர்த்தர் தம்முடைய ஜனங்களோடு செய்கிற ஒரு ஒப்பந்தம். *(Agreement)*.வேதத்திலே ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விஷேசம் வரை பலவிதமான உடன்படிக்கைகளைக் காண்கிறோம்.தேவன் தாம் படைத்த மனிதர்களோடு ஒப்பந்தம் செய்கிறார். ஆதாம் துவங்கி நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, யோசுவா, தாவீது என்று சொல்லிக்கொண்டே போகலாம். இவைகளெல்லாம் பழைய உடன்படிக்கை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியின் மனுக்குலத்திற்காக இறங்கி வந்தபோது, ஜனங்களுக்காக புதிய உடன்படிக்கையை சிலுவையில் மனுக்குலத்தின் மீட்பிற்காக சிந்தின இரத்தத்தினாலே உண்டாக்கினார். **"அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து,இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதை பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்"** *(1 கொரி 11 : 25).*

இந்த உடன்படிக்கையை அவர் பிரமாணங்களாக அவர் கொடுத்தபோது பழைய பிரமாணங்களிலிருந்து அது வேறுபட்டு இருந்தது. அதற்காக பழைய பிரமாணங்களை அழிக்கவோ , ஒழிக்கவோ வரவில்லை. புதிய உடன்படிக்கையை தந்து எல்லாவற்றையும் நிறைவேற்றவே இயேசு வந்தார். நியாயப்பிரமாணத்தை அழிக்கும்படியாக அல்ல,நிறைவேற்றவே வந்தார். ஏனெனில்பழைய உடன்படிக்கையாகிய பழையபிரமாணங்களினால் செய்யப்பட்ட உடன்படிக்கையினாலே, அதாவது **"நியாயப் பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில் விசுவாசத்தினாலே**

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பூமியின் மனுக்குலத்திற்காக இறங்கி வந்தபோது, ஜனங்களுக்காக புதிய உடன் படிக்கையை சிலுவையில் மனுக்குலத்தின் மீட்பிற்காக சிந்தின இரத்தத்தினாலே உண்டாக்கினார்.**

நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே”! (கலாத்தியர் 3 : 11 ). இது ஒன்றையும் பூரணப்படுத்த முடியாது என்பதால் (எபி 7 : 19) இயேசுதாமே குமாரனாய்வெளிப்பட்டு சிந்திய இரத்தத்தினால் நம்மை பூரணமாக்க விரும்பினார். புரிந்து கொள்வோம்,கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவா யிருக்கிறார்.(ரோமர்10 : 4).அதே ரோமருக்கு பவுல் எழுதும் போது **“இப்பொழுதோ நாம் பழைமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத்தக்கதாக, நம்மை கட்டியிருந்த நியாயப் பிராணத்திருக்கு நாம் மரித்தவர்களாகி அதினின்று விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம்”** ( ரோமர் 7 : 6).

**இன்றைய அநேக கிறிஸ்தவ சபைகள் இன்றும் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று தெரியாமலே விளங்காமலே பழைய பிரமாணங்களுக்கு விலகாமலே இருக்கிறார்கள் பரிதாபம்! இயேசுகிறிஸ்து எங்கள் இரட்சகர் என்று சொல்லுகிறார்களேயொழிய, இயேசு கிறிஸ்துவினால் வரும் பூரணத்திற்கு இன்னும் சொந்தமாக முடியாமல்,வழி தெரியாமல், விழி பிதுங்கிக் கொண்டிருக்கிறதைத்தான் அதிகமாக காண முடிகிறது.**

ஏன் இதை விவரமாக எழுதுகிறேனென்றால் இன்றைய அநேக கிறிஸ்தவ சபைகள் இன்றும் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று தெரியாமலே விளங்காமலே பழைய பிரமாணங்களுக்கு விலகாமலே இருக்கிறார்கள். பரிதாபம்! இயேசு கிறிஸ்து எங்கள் இரட்சகர் என்று சொல்லுகிறார்களே யொழிய, இயேசுகிறிஸ்துவினால் வரும் பூரணத்திற்கு இன்னும் சொந்தமாக முடியாமல்,வழி தெரியாமல், விழி பிதுங்கிக் கொண்டிருக்கிறதைத்தான் அதிகமாக காண முடிகிறது. ஆனால் தங்கள் உள்ளத்திலோ நாங்கள் எல்லாம் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் என்று நடந்து காட்டுவதுதான் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. இன்றைய நாட்களில் அநேகருடைய ***system*** மாக இது மாறி விட்டது. ஜீரணிக்க முடியா மல் உண்மை கிறிஸ்தவம் தத்தளித்துக் கொண்டிருக் கிறது (வயிற்று வலியால்).

ஒருபக்கம் இப்படியிருக்க, இன்னொரு பக்கம் நாங்கள் மறுபடியும் பிறந்தவர்கள், இரட்சிக்கப் பட்டவர்கள், முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தவர்கள், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் துள்ளுகிறவர்கள், பெந்தெகொஸ்தே காரர்கள், உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்கள் என்கிறவர்கள் உபதேசம் என்ற பெயரில் மற்றவர்களுடைய தலையை உருட்டுகிற உருட்டு முரட்டுத்தனமா இருக்கப்பா.... சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் இயேசுவா, இல்லை இவர்களா என்று தெரியாத அளவுக்கு நம்ம மூளையெல்லாம் கழற்றி ஒரு மூலையிலே வைத்துவிடுகிறார்கள். சிரிப்பதற்கு எழுதவில்லை. சிந்திப்பதற்கு எழுதுகிறேன். ***You Tube*** என்ற பெயருக்கேற்ப ஆள்காட்டி விரலை பிறருக்கு நேராகத் தான் நீட்டுகிறார் களேயொழிய, தன் பக்கமாய் நீட்ட ஆட்கள் வெகு குறைவு. உபதேசங்கள் ***Break dance*** ஆடுகிற அளவுக்கு வந்து விட்டது. அவரவர் இருதயங் களில், எண்ணங்களில் தோன்றுவதெல்லாம் உபதேசங்கள் என்று சொல்லிக் கொண்டு உண்மை பரிசுத்தவான்களையும், அப்போஸ்தலர். தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருந்தவர்களையும் (எபேசியர் 2 :20) ஒரு வழியாக்கி, அவர்களின் விசுவாசத்தை வழுவிப்போகச் செய்கிறவர்களின் கூட்டம் நாளுக்கு நாள் புற்றீசல் போல பெருகிவருகிறது. அருமை விசுவாசிகளே, ஊழியர்களே, புற்றுக்குள்ளே விதவிதமான விஷம் நிறைந்த பாம்புகள் உண்டு. போட்டுத் தள்ளிறும்... ஜாக்கிரதை! ஆத்துமா விலையேறப்பெற்றது. நஷ்டப் படுத்தி விடாதீர்கள். ஆட்டுத்தோல் போர்த்தி

வருகிற ஓநாய்களுக்கு மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். ஓநாய்களை ஓரம் கட்டுங்கள். **மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி,சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன் ...**(அப் *20:29*).

புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கும் இயேசுதாமே சீக்கிரம் வரப்போகிறார். வந்து நித்திய உடன்படிக்கையை தன்னுடைய மணவாட்டியாகிய சபையோடு நிலைநாட்டி மணவாட்டிகளை (சபையில் உள்ள எல்லோரையும் அல்ல) தன்னோடுகூட எடுத்துச்செல்லப்போகிறார். இது கதையல்ல, கட்டுக்கதையும் அல்ல, சம்பவிக்கப் போகிற ஒன்று. ஆயத்தமாவோம்.

ஒரு சில நல்ல அருமையான ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கேற்ற செய்திகள் உண்டு. தேடிச்செல்லுங்கள். அப்படிப்பட்டவர்களுடைய செய்தியை, உபதேசத்தை சேகரித்து வைத்து கொஞ்சம் தியானியுங்கள். உங்கள் சபை போதகரின் சத்தியம் சரியானதாயிருந்தால் அதற்கு முதலிடம் கொடுங்கள். அப்போதுதான் மறுருபமாகி அவரோடு மேலே போவோம்.மேலவீட்டறை அனுபவம் ஒருவனுக்குள் ஒழுங்காக இல்லா விட்டால் (அப் –2ம் அதிகாரம்) கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒழுக்குதான் மிஞ்சும்.அது தேவனுடைய மகிமைக்கு கிடைக்கும் இழுக்கு.

**அவரவர் இருதயங்களில்,எண்ணங்களில் தோன்றுவதெல்லாம் உபதேசங்கள் என்று சொல்லிக் கொண்டு உண்மை பரிசுத்தவான்களையும், அப்போஸ்தலர். தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருந்தவர்களையும் (எபேசியர் 2 :20) ஒரு வழியாக்கி, அவர்களின் விசுவாசத்தை வழுவிப்போகச் செய்கிற வர்களின் கூட்டம் நாளுக்கு நாள் புற்றீசல் போல பெருகி வருகிறது.**

அப்புறம் என்ன? யாக்கோபைப் போல காலை இழுத்து இழுத்துத்தான் நடக்கணும். இது தான் தொடை சுளுக்கு. புரியுமென்று நினைக் கிறேன்.

ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்குபெறுவது என்பது அத்தனை சுலபமல்ல, ஆட்டுத்தொட்டியில் (சென்னை) ஆடு வாங்குகிற மாதிரி நினைச்சிட கூடாது. இன்று சிலர் இங்கிருந்துகொண்டே பரலோகத்திற்கு ***Reservation Ticket*** கொடுத்துகிட்டு இருக்கிறார்கள்.தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். பூமியிலே நமக்கு குறிக்கப்பட்ட நாட் களிலே கர்த்தராகிய இயேசு வையே சார்ந்து, அவரையே நம்பி வாழ்வோம். **என் நுகம் இனிது என் சுமை எளிது** என்று சொல்லியிருக்கிறாரே! உண்மையுள்ள தேவன் அல்லவா! வாக்கு மாறாதவர் அல்லவா! கொஞ்சம் அர்ப்பணித்துதான் பாருங்களேன்...! மனுஷனை கனம் பண்ணுங்கள். ஆனால் நம்பிக்கையை கர்த்தர் மேல் வையுங்கள்.ஏனெனில் எந்த மனுஷனும் மாயையே..! ஆட்டக்காரர்கள், பாட்டுக்காரர்கள், பரிசுத்தவான்களைப் போல பாவலா பண்ணுகிறவர்கள் அநேகர் உண்டு. மயங்கி விடாதீர்கள். ரசிகர் மன்றம் ஆரம்பித்துவிடாதீர்கள். ஆபத்து.**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்** (யோவான் 14:11). உடன்படிக்கையை கொஞ்சம் விவரிக்கிறேன். அங்கே மூன்று **'அ'** கரங்கள் உண்டு. **1.அறிதல். 2.அமர்தல். 3.அறிவித்தல்.** கவனமாய் படியுங்கள்.



# 1. புது உடன்படிக்கையை அறிதல்



**"புது உடன்படிக்கை என்று சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமை யாக்கினார். பழமையானதும், நாள்பட்டது மாயிருக்கிறது உருவழிந்து போக காலம் சமீபித்திருக்கிறது"** (*எபி 8 : 13*) . அர்த்தம் என்ன? புதிய சட்டம் வந்தபிறகு பழைய சட்டம் கிடப்பையில் போடப்படும் .அப்படியென்றால் புதிய சட்டம் என்ன?

**" அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதிலே எழுதுவேன்"** என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்த பின்பு..... **இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனி பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே...!** (*எபி 10 : 16, 18*).

கவனியுங்கள், புது உடன் படிக்கை என்பது **அவருடைய பிரமாணங்களை (வசனத்தை) நம் இருதயத்தில் எழுதுவது அல்லது வரைவது.** அது கற்பலகைகளில்அல்ல; பதிப்பகத்திலும் அல்ல,மோசேயின் கற்பலகை, பிரமாணம் தேவனிடத்திலிருந்துதான் சீனாய் மலையில் பெற்றது.கீழே பாளையத்திற்கு வருவதற்குள் உடைந்துபோனது (*யாத் 31 :18*) (*யாத் 32 :19*). அவருடைய பிரமாணங்கள்,அதாவது வார்த்தையானது ஜீவனும் ஆவியுமாயிருக்கிறது ***(ஜீவன்=Life. ஆவி=Sprit)*** இந்த இரண்டையும் தருவதுதான் அவருடைய வார்த்தை: (*ரோமர் 8: 2*). (*எபி4 :12*).

இந்த ஜீவனும் ஆவியும் நம் இருதயமாகிய பலகையில் பதிக்கப்படாவிட்டால் (*எபி 8: 10*) நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை வீண்( *1கொரி 9 : 26*). ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுவது போலத்தான் காணப்படும். ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுவது எளிது. யாரும் பண்ணலாம். கிறிஸ்தவ பெயரை யாரும் தரித்துக்கொள்ளலாம். கிறிஸ்தவ சபைக்குள்ளும் ஆலயத்திற்குள்ளும் யாரும் ஆராதிக்கலாம். ஆனால் கிறிஸ்துவுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வது என்பது அத்தனை எளிதல்ல. அது இயேசுவின் இரத்தத்தினால் உண்டாகிய உடன்


**ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுவது எளிது. யாரும் பண்ணலாம். கிறிஸ்தவ பெயரை யாரும் தரித்துக் கொள்ளலாம். கிறிஸ்தவ சபைக்குள்ளும் ஆலயத்திற்குள்ளும் யாரும் ஆராதிக்கலாம். ஆனால் கிறிஸ்துவுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வது என்பது அத்தனை எளிதல்ல.அது இயேசுவின் இரத்தத்தினால்உண்டாகிய உடன்படிக்கை அல்லவா! அது பேசும் இரத்தம்.**

படிக்கை அல்லவா! அது பேசும் இரத்தம். **ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தம்** (எபி 12 :24).ஆகவே ஒருவனுடைய மனச் சாட்சியை உறுத்தும். குத்தும். சத்தமிடும். சும்மாவிடாது. கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொண்டு, கிறிஸ்து காண்பித்துச் சென்ற அடிச்சுவடு நமக்கு முன் இல்லாவிட்டால் நம்முடைய நிலைமையும் ஆகாச சிலம்புதான். ஆகவே புது உடன் படிக்கையின் சத்தியத்தை அறிந்து கொள்வோம்.

கைகளால் இனி பலியிட வேண்டிய அவசியமில்லை. எந்த பூசைப்பலியும் இனி நமக்குத் தேவையில்லை.நீங்கள் எப்படி சொல்ல முடியும்? உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று நீங்கள் கேட்க லாம்.வசனங்களை நான் கத்தோலிக்க விவிலி யத்திலிருந்தே எடுத்து எழுதுகிறேன். கொஞ் சம் கவனித்துப் படிக்கவும்.

**வரப்போகும் நலன்களின் உண்மை உருவைத் திருச்சட்டம் எடுத்துக் காட்ட வில்லை.அது அவற்றின் நிழலாக மட்டுமே உள்ளது.எனவேதான் ஆண்டுதோறும் இடை விடாமல் செலுத்தப்படும் அதே பலிகளால் வழிபட வருபவர்களை நிறைவுள்ளவர் களாக்க அதற்கு வலிமையில்லை** (எபிரெயர் 10 : 1).

அப்படியென்றால் வலிமையுள்ளது எது? தொடர்ந்து படியுங்கள்.இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறைதன் உடலைப் பலியாகச் செலுத்தி யதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டி ருக்கிறோம்.... தாம் தூயவராக்கியவர் களை ஒரே பலியி னால் என்றென்றைக்



கும் நிறைவுள்ளவராக்கினார் (எபி 10 : 10,14).

அப்படியென்றால் அந்த ஒரே பலி எது? அதுதான் தம் ஜனத்தோடு அவர் செய்யும் புது உடன் படிக்கையின் பலி. இதற்கு ***organizer*** யாரென்றால் அவர்தான் **தூய ஆவி.** இப்போது தொடர்ந்து படியுங்கள். இதுபற்றி தூய ஆவியானவரும் **அந்நாட்களுக்குப் பிறகு அவர்களோடு நான் செய்யவிருக்கும் உடன்படிக்கை இதுவே. என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தல் பதிப்பேன். அதை அவர்களது இதயத்தில் எழுதிவைப்பேன்** (எபிரெயர் 10 : 15,16).

நன்றாக கவனியுங்கள்.பழைய திரைச் சீலை கிழிக்கப்பட்டது.அது இனி இல்லை. பழைய முறைமைகளெல்லாம் தள்ளப்பட்டது. விலக்கப்பட்டது. நாம் ஒவ் வொருவரும் இந்த புதிய வழி, இந்த புதிய மார்க்கத்தின் மூலம் **“தெரிந்தடுக்கப்பட்ட வழி மரபினராகவும், அரச குருக்களின் கூட்டத்தினராகவும், தூய மக்களினத்தினரா கவும், அவரது உரிமைச் சொத்தான மக்களி னத்தினராகவும், அவரது உரிமைச் சொத் தான மக்களாகவும் ஆகிறோம்”** (1 பேதுரு 2 : 9) . புதிய வழிகளை பிடித்துக் கொண்ட நீங்களும் நானும் குருக்களாக இருக்கிறோம். நம்ம பாஷையிலே சொல்லப் போனால் நாமே சாமியார்களாக இருக்கிறோம். நாமே கடவுளு டைய கோவிலாக இருக்கிறோம் (1 கொரி 3 : 16).

நீ உண்மை வழியை அறிந்து கொண்டால் சத்தியத்தை பிடித்துக்கொண்

**நீ உண்மை வழியை அறிந்து கொண்டால் சத்தியத்தை பிடித்துக்கொண் டால் நீங்கள்தான் புதிய உடன்படிக்கையின் சாமியார் நீங்கள்தான். புதிய உடன் படிக்கையின் கோவில் நீங்கள்தான். எத்தனை பெரிய *Promotion* நமக்கு பார்த்தீங்களா..!**



டால் நீங்கள்தான் புதிய உடன்படிக்கையின் சாமியார் நீங்கள்தான்.புதிய உடன்படிக்கை யின் கோவில் நீங்கள்தான். எத்தனை பெரிய ***Promotion*** நமக்கு பார்த்தீங்களா..! இதை விட்டு விட்டு நாங்கள் கிளிப்பிள்ளை போல சொன்னதையே சொல்லிகிட்டு, மணியை உருட்டி கிட்டு, இயேசுவின் வ ழியை பின்பற்றி வந்தவர்களையெல்லாம் தங்களுக்கு மத்தி யஸ்தகளாய் (mediator) வைத்துக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோவிலை கட்டி, அவர்களுக்கு கொடிமரம் வைத்து, கொடியேற்றி, தலைமேலே தூக்கி வைத்து ஊர்வலமாய் போய்க் கொண்டு, பண்டிகை என்ற பெயரில் ஆட்டம் போட்டுக் கொண்டு, **தூய ஆவியானவரை** தூரவைத்து விட்டு, சொந்த வழியிலே தோன்றினதையெல்லாம் செய்வதுதான் கிறிஸ்தவமா? விவிலியத்தில் இப்படியெல்லாம் செய்ய வேண்டும், செய்து என்னை தொழுது கொள்ளவேண்டும் என்று எங்கே சொல்லப் பட்டிருக்கிறது! வேதனை! தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருப்போம். இயேசுவின் கற்பனையை ஏற்றுக்கொள்ளுங் கள். அதன்படி நடங்கள். அவருடைய அடிச் சுவடுகளையே மாதிரியாக வையுங்கள். புதிய உடன்படிக்கையை அறிந்து, புதிய உடன் படிக்கைக்குரியவர்களாய் இருங்கள்.

## உ. புது உடன்படிக்கையில் அமர்தல்



**“ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரு டனே பண்ணின உடன்படிக்கையிருக்கிற பெட்டியை அதிலே வைத்தேன் என்று சொல்லி....”***(2 நாளா 6 :10,11).*

சாலொமோன் உடன்படிக்கை இருக்கிற பெட்டியை ஆலயத்திலே வைக்கி

றான்.பழைய உடன்படிக்கை பெட்டிக்குள் இருந்தது என்ன?1. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம்.2.ஆரோனின் துளிர்த்த கோல்.3.உடன்படிக்கையின் கற்பலகைகள்.

கவனியுங்கள், 1. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் – கர்த்தரின் பந்தியை குறிப்பது (நன்மை கொடுக்கிறீர்களே அது தான்). சிலுவை பலி – மரணம்– அந்த மரணத்தை நினைவுகூர்ந்து அதில் நம் பங்கு.**2.ஆரோனின் துளிர்த்த கோல்**.மரித்த இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் அவருடைய உயிர்த்தெழுதலையும் அதன் வல்லமையையும் குறிப்பது. **3. உடன்படிக்கையின் கற்பலகைகள்** – வார்த்தையை குறிப்பது. இன்று அவர் வார்த்தையாய் நம் நடுவில் வாசம் செய்கிறார். நாம் வார்த்தையினால்தான் வாழ வேண்டும். வார்த்தை தன்னில் இல்லாதவன் கிறிஸ்தவன் அல்ல. கிறிஸ்துவுக்குரியவன் மேலே சொல்லப்பட்ட மூன்றையும் தனக்குரியதாக்கிக் கொள்ள வேண்டும். **மூன்றையும் சுமக்கிற உடன்படிக்கை பெட்டி நாம்தான்.** இந்த உடன்படிக்கை பெட்டி நம்மிலே நிலைத்திருக்க வேண்டும். தேவனுடைய ஆலயமாகிய நமக்குள் நிலைநிறுத்தப்பட்டால்தான், அது பரிசுத்த ஆலயம்.இல்லாவிட்டால் பறிபோன ஆலயம்.ஆம்; கிறிஸ்தவம் பெயரளவில் தான் இருக்கிறது.அது என்றோ பறிபோய் விட்டது.கிபி. 3–நூற்றாண்டின் முடிவிலே கான்ஸ்டன்டைன் மன்னனால் **கத்தோலிக்கம்** என்ற பெயரில் ***(Means Universal)*** உருவாக்கப்பட்டு உடன்படிக்கைகள் அவருடனேயே போய் விட்டது. ஆதி அப்போஸ்தல சபையின் (அப் 2,3,அதிகாரங்கள்) அனுபவங்கள் முதலாம் இரண்டாம் நூற்றாண்டிலேயே மடங்கடிக்கப்பட்டது. ரோமானியர் களால்குழி தோண்டிபுதைக்கப் பட்டது (எபிரெயர் 11–ம் அதிகா ரம்).

**இன்று அவர் வார்த்தையாய் நம் நடுவில் வாசம் செய்கிறார். நாம் வார்த்தையினால்தான் வாழ வேண்டும். வார்த்தை தன்னில் இல்லாதவன் கிறிஸ்தவன் அல்ல. கிறிஸ்துவுக்குரியவன் மேலே சொல்லப்பட்ட மூன்றையும் தனக்குரியதாக்கிக் கொள்ளவேண்டும். மூன்றையும் சுமக்கிற உடன்படிக்கை பெட்டி நாம்தான்.**

கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற யோவேல் 2–ம்அதிகாரத்தின்படி, இந்த நாட்களில் புதிய உடன்படிக்கை பெட்டிகள் பெருகி வருகிறது.ஆனால் அங்கேயும் நிறைய சில்லறைத்தனம். ஆம், முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் . இந்த இரட்சிப்பினால் அலங்கரிக்கப்பட்ட புதிய உடன்படிக்கை பெட்டியை (மணவாட்டி) தன்னோடு எடுத்துக் கொள்ளத்தான், சொன்ன படியே **இயேசு சீக்கிரம் வரப்போகிறார்.** புது உடன்படிக்கையின் பிள்ளைகளாயிருப்போம். புது உடன்படிக்கையில் அமர்ந்திருப்போம். அதில் நிலைத்திருப்போம்.



## 3.புது உடன்படிக்கையை அறிவித்தல்

**“போஜனம் பண்ணின பின்பு, அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையா யிருக்கிறது; நீங்கள் இதை பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங் கள் என்றார் ”** ( 1கொரி 11 : 25).

சொல்லப்பட்ட புதிய உடன்படிக்கையிலே அவருடைய மரணம் அடங்கியிருக்கிறது. இயேசுவின் மரணத்தை மறைப்பவர்களாக அல்ல, அதை நினைவு கூர்ந்து மற்றவர்களும் நினைவுகூரும்படி செய்ய வேண்டும். அப்படியென்றால் நாம் அறிவித்தால்தான் மற்றவர்களும் கேள்விப்படுவார்கள். Go and spell. இதுதான் Gospell. **பழையஉடன் படிக்கை பெட்டிக்குள் அடைக்கப் பட்டிருந் தது. புதிய உடன்படிக்கையின் சத்தியம் அடைக்கப்படுவதற்கு அல்ல. அது அறிவிக் கப்படுவதற்கு.** நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு ஆண்டவர் உங்களோடு இருப் பாராக.. உம்மோடும் இருப்பாராக என்று பாட்டு பாடிவிட்டு போவதல்ல! மனுஷ குமாரன் பிறந்தார்.. வளர்ந்தார்....நானே வழி, சத்தியம் ஜீவன் என்று உபதேசித்தார்.மனுக்குலத்தின் மீட்புக்கென்று சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்தார்.இதை விசுவாசிக்கிறவர்களுக்கு மீட்பருளுகிறார்.பிள்ளையாய் மாற்றுகிறார். தம்மோடு சுதந் தரவாளியாக்கி தம் இரத்தத் தால் சம்பாதித்த சபையில் சேர்த்து தமக்குகந்த **‘மண வாட்டி’**யாக உருமாற்று கிறார். மணவாளனாய் வந்து தன் மண வாட்டியை தன்னோடு மறுரூப மாக்குகிறார். நித்திய ஜீவனை,நித்திய இராஜ்யத்தை (Eternal Life ) தருகிறார். ஆம், இதைப்போய் அறிவிக்க வேண்டும். இதுதான் புதிய உடன்படிக்கையை அறிவித்தல். அறிந்து புரிந்து அவரை தொழுது கொள்வது அவருக்குகந்த பிரியமான ஆராதனை. மற்றவையெல்லாம் பொழுது போக்கே! பிரயோஜனமற்றது, புரிந்து கொள்ள முயற்சி யுங்கள். கிளிப்பிள்ளைகளாய் இருக்க வேணடாம்.

ஒருபக்கம் இப்படியென்றால் , மறுபக்கம் உபதேசம், பிரசங்கம் என்ற பெயரிலே எதை எதையோ உளறுவதை ***You Tube, He Tube, We Tube*** என்று எல்லா Tubeகளிலும் அதிகமாக பார்க்க முடிகிறது. ஜனங்கள் குழம்பிபோய் இருக்கிறார்கள் . உபதேசங்களைக் கேட்டு சிலர் பழைய பாவ பழக்கங்களுக்கே திரும்பி விட்டார்கள். எல்லாவற்றையும் கிருபை மன்னித்து விடுமாம். இன்னொரு கூட்டம் சொல்லு கிறது, கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இவ் வுலகில் மரணமே இல்லை (சரீர மரணம்) என்கிறார்கள்.(சொல்லுகிறவர்களுக்கு கொரோனா வந்தால் தெரியும்!) **அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் , பின்பு நியாயத்தீரப் படைவதும் மனுஷனுக்கு நியமிக்கிப்பட் டிருக்கிறபடியே...** (எபி 9 : 27). ஒரு கூட்டம் பாடுகளே இல்லை... வெறும் பாட்டு போதும் பரலோகம் போவதற்கு என்கி றது. ஒரு கூட்டம் ஆசீர்வாதம்... ஆசீர் வாதம் என்று பேசியே சத்திய உபதேசங்களை அநியாயத் திற்கு ஒளித்து, மறைத்து அநேகரை முடக்கு வாதத்திலே தள்ளி போட்டிருக்கிறது. முடக்கு வாதத்திலே விழுந்து கிடக்கிறவர்கள் பேசாம இருந்தாலும் பரவாயில்லை..! நம்ம கிட்ட வந்து அடிக்கடி இடக்கு பண்ணி கிட்டிருக் காங்க..! அதையும் சகித்து தான் போக வேண்டி கிடக்குது!

**இது கடைசி நாட்கள். சத்தியம் நிறைந்த, உண்மை சத்துவம் நிறைந்த சபைகளில் அடங்கியிருங் கள்.திருாள் மிட்டாய் கடையை சுற்றி வருவது போல சபைக்கு சபை சுற்றி வர வேண்டாம். கர்த்தர் பின்னாலே சுத்திய–லோடு (நியாயத்தீர்ப் பு) நின்று கொண்டிருக்கிறார். தெளிந்த புத்தியுள் ளவர்களாயிருப்போம். புதிய உடன்படிக்கை யில் தெளிவாயிருந்து அதை பிறருக்கு அறிவிப் போம்.**

இன்னொரு பக்கம் புகை போட்டு தேவ பிரசன்னத்தை கயிறு போட்டு இழுக்காத குறையா.. இதுதான் தேவபிரசன்னம் என்று ஆணித்ததரமா அடித்து சொல்லுகிறார்கள். இப்படி அநேக காரியங்கள் அடுக்கிக் கொண்டே போகலாம், இது கடைசி நாட்கள். சத்தியம் நிறைந்த, உண்மை சத்துவம் நிறைந்த சபைகளில் அடங்கியிருங்கள். திருநாள் மிட் டாய் கடையை சுற்றி வருவதுபோல சபைக்கு சபை சுற்றி வர வேண்டாம். கர்த்தர் பின்னாலே **சுத்திய–லோடு** (நியாயத்தீர்ப் பு) நின்று கொண்டிருக்கிறார். தெளிந்த புத்தியுள்ளவர் களாயிருப்போம். புதிய உடன்படிக்கையில் தெளிவாயிருந்து அதை பிறருக்கு அறிவிப் போம்.

இப்போது இன்னொரு புதிய *Trend* வேகமாக பரவி வருகிறது.ஆள் ஆளுக்கு இதை புடிச்சிகிட்டாங்க...! அதுதான் **தசம பாகம்.** அது பழைய ஏற்பாடு..இது புதிய ஏற்பாடு.அது பழைய உடன்படிக்கை, இது புதிய உடன்படிக்கை. அது நியாயப் பிரமாணம், இது நியாயம் இல்லாத பிரமாணம் என்று கண்ணிலே *Lens* வைத்து வசனங்களை புள்ளி விடாமல் தேடி *You Tube,He Tube,We Tube* என்று எல்லா *Tube* களிலும் போட்டு வருகிறார்கள்.எவ்வளவோ சத்தியங்கள் உபதேசங்கள் அறிவிக்கப்பட வேண்டிய திருக்க, கூட்டி கழித்து காணிக்கையிலே வந்து ஏய்யா நிக்கிறீங்க....! *Brother,* கர்த்தருக் கும்,கர்த்தருடைய ஊழியத்திற்கும் கொண்டு வந்து அதுவும் சபைக்குள் அடங்கியிருந்து ***( காட்டுக் கழுதை போல் சுற்றி வராமல்)*** சபை ஊழியங்களுக்கு கொடுத்தா உங்களுக்கு என்னய்யா..? பத்தை கொடுக்கிறான், இருபதைக் கொடுக்கிறான் , முப்பதை கொடுக்கிறான், ஐந்தை கொடுக்கிறான் இல்லை ஒன்றைதான் கொடுக்கிறான் உங்களுக்கு என்னய்யா! வேதம் என்ன சொல்லுகிறது! பின்னும் நான் சொல்லுகிற தென்னவெனில்,**“சிறுக விதைக்கிறவன்**



**சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்**

**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாய மாயுமல்ல,தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய் கொடுக் கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக் கிறார்”**(2 கொரி 9 : 6,7).இவ்வளவுதான் இதுதான் புதிய உடன்படிக்கை. பழைய ஏற்பாடு, பழைய பிரமாணம், நியாயப் பிரமாணம், லேவியர், ஆசாரியர் என்று எங்கெங்கேயோ போய் ஜனங்களை ஏம்பா குழப்புறீங்க..! ஒன்று தெரியுமா! **நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங் களையானாலும் அழிக்கிறதற்கு வந்தே னென்று எண்ணிக்கொள்ளாதேயுங் கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்று கிறதற் கேவந்தேன்** (மத் 5 :17). **இவ்விதமாய் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படு வதற்கு நியாயப் பிரமாணம் நம்மை கிறிஸ்து வினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத் திக்குக் கீழானவர்களல்லவே**(கலா 3 24,25).

ஆகவே எதைச்செய்தாலும் முழு மனதோடும்,உண்மையோடும் அவருடைய மகிமைக்காகச் செய்தால் அதுதான் அவருக் குப் பிரியம். அதுவே ஆசீர்வாதம். புதிய ஏற்பாட்டில் தசமபாகம் பற்றி வலியுறுத்தல ! வாஸ்தவம்தான். பழைய ஏற்பாட்டில் வலியு றுத்தப்பட்டிருக்கிறது. உண்மைதான். நம்ம வசதிக்கு வேதத்தை கையாளக் கூடாது.

பழைய ஏற்பாடும் வேதம்தான். கர்த்தருடைய வார்த்தைதான்.**பழைய ஏற்பாடு தசமபாகத்தை வலியுறுத்துகிறதென்றால் புதிய ஏற்பாடு தசம பாகத்திற்கும் மேலாக காணிக்கையை வலியுறுத்துகிறதே!** என்ன பண்ணலாம்! பழைய சட்டத்தையும் தாண்டி ஒரு புதிய சட்டம் வந்துவிட்டதே! **நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்** ( லூக் 6 : 38). என்று இயேசுவே சொல்லிவிட்டாரே! சிலர் காணிக்கைக்காகவே சபைகளை நடத்துகிறார்கள். சிலருடைய ஊழியம் *Luxary*யாகவே சென்று கொண்டிருக்கிறது. அவங்கள கூப்பிட்டு தனியே சொல்லுங்க... ஜனங்களை குழப்ப வேண்டாம். காணிக்கை என்ற சத்தியத்தை (அது ஒரு சத்தியம்) உடைத்துப் போட வேண்டாம். என்னுடைய முப்பது வருட ஊ ழியத்திலே தசமபாகம் கொடுக்கிறவர்களின் ஆசீர் வாதத்தையும் பார்த்திருக்கிறேன். கொடுக்காதவர்களின் குறைவுகளையும், பொத்தலான பையையும் பார்த்துதான் வருகிறேன். நானும் இந்த முப்பது வருட ஊழியத்திலே தசமபாகம் தவறாமல் கொடுக்கிற ஊழியன்தான். எங்களை தேவன் நடத்தி வருகிற வழிகளையும் ருசிக்கத்தான் செய்கிறேன். அனுபவித்து பேசுவதற்கும்,சொல்லுகிற காரியத்தைக் குறித்து அனுபவம் இல்லாமல் பேசுவதற்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. **வழியே போகையில் தனக்கடுக்காத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதை பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான்** (நீதி 26 :17) என் இயேசு வந்ததே தம் சுய இரத்தத்தை சிந்தி சபையை ஏற்படுத்த..! (அப் 20 :28). நீங்களும் நானும்தான் சபை. இந்த சபையை எடுத்துக் கொள்ளத்தான் (மணவாட்டி) மணவாளன் வரப்போகிறார். ஆகவே சபை, சபை கூடுதல்,சபை சத்தியம், சபை ஆசீர்வாதம்,சபையின் மேன்மை,சபை பாதுகாப்பு,சபை பரிசுத்தம் என்பதெல்லாம்



சத்திய மார்க்க சபையின் வகைகள். தயவுசெய்து யாரும் அதை களங்கப்படுத்தாதீர்கள்.நியாயத்தீர்ப்பிலே எல்லாவற் றிற்காகவும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று யாரும் பேசி விட்டு போய்விட முடியாது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது சபையை தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியிடம் தந்துவிட்டு சென்றிருக்கிறார். அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்த வல்லவர். ஆவியானவரை யாரும் துக்கப்படுத்த வேண்டாம்.அது ஆபத்து. பத்து குறித்து பேசினாலும் ஆபத்து. பரிசுத்த ஆவியைக் குறித்து பேசினாலும் ஆபத்து. விழிப்பாயிருப்போம். கர்த்தத்துவத்தை யாரும் அசட்டை பண்ண வேண்டாம்.

ஆகவே புதிய உடன்படிக்கையை அறிவோம், அதில் அமர்வோம்,அதை அறிவிப்போம். எல்லாவற்றிலும் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருப்போம்.

**சேர்த்து வைக்காதே**
**திருடன் பறித்திடுவான்**
**கொடுத்திடு கர்த்தருக்கே**
**குறைவின்றி நடத்திடுவார்**

**உனனையே வெறுத்து விட்டால்**
**ஊழியம் செய்திடலாம்**

# சிந்தனைக்கு

- கர்த்தருடைய ஊழியமென்பது தனக்குள்ளே பிடித்து வைப்பதல்ல அது பகிர்ந்தளிப்பதும் பரவச் செய்வதுமே ! (அப் 20 : 24).
- விசுவாச ஊழியம், விசுவாச ஊழியம் என்பது தேவனுடைய அழைப்பும் அவர் தந்த தரிசனத்தின் மேல் நடப்பதே! (ரோமர் 1 :1 7).
- ஊழியத்திலே கர்த்தருக்கேற்ற வளர்ச்சிக்கு உபயோகப்படுவது அவருடைய ஆயுதங்களே! நம்முடைய ஆதாய சிந்தையல்ல ! (எபே 6 : 10 -17).
- ஊழியம் என்பது மிகவும் கனத்திற்கும்,பயத்திற்குமுரியது, அது எடுப்பார் கைப்பிள்ளையல்ல! (யாக் 3 : 1).
- ஊழியத்திலே சபைக்கு சத்திய உபதேசம் அவசியம், அதிலும் மிக அவசியம் தேவ அன்பும்,வெளிப்படுகிற ஐக்கியமுமே ! (1தீமோ 5 : 8)
- உருண்டு பிரண்டு எழுந்தாலும், விழுந்து எழுந்து ஓடினாலும் ஊழியத்தின் உயர்வு அவருடைய கரத்திலே! (1பேதுரு 5 : 6).
- ***Building strong Basement weak*** அல்ல ஊழியம் ஊழியத்தின் ***Basement*** யே உண்மை உண்மை,கிறிஸ்துவுக்குள் உண்மை. (எபே 2 : 20-22).

## திரு குரல்

**1.இறை உணர்வை அனுபவிப்பவன் அதி தூய்மைக்கு அருளப்படுவதே முன்மாரி பின்மாரி என்ற வான் மழை**
**(அதிகாரம்: 2.குறள்: 2).**

**2.சாவா மருந்தாகிய நீதி நிறைந்த வான் ஆவியே வாழ்பவர்க்கெல்லாம் உன்னத மழை.**
**(அதிகாரம்:2.குறள் 1).**

**3.பிறவித் தீவினையாகிய பெரும் சாபம் நீங்கும் ஆவியின் வாக்கியங்களை உண்பவர்க்கு .**
**(அதிகாரம்:1. குறள்:8 ).**

**4.தலையான ஒரே தேவனை அறிந்து அனுபவிப்பவனே பிறவிப் பெருங்கடலாம் பாவக்கடலை கடப்பான்.**
**(அதிகாரம்:1. குறள்: 10).**

**5.சிலுவைப் பொறியில் ஐம்புலனை பலியிட்டவனின்**

**சத்திய நெறியில் நடப்பவனே நித்திய வீட்டைஅடைவான்.**
**(அதிகாரம்:1.குறள்:6).**

## வானவெடி

கிறிஸ்தவ உலகில் அவர் சித்தம், அவர் சித்தம்,தேவசித்தம் என்ற சத்தம் அநேகரிடத்தில் அதிகமாய் தொனிக்கின்ற ஒன்று தான்.ஒரு கூட்டத்தார் தங்களுக்குள்ளே சொந்த விருப்பத்தையும், அநேக ஆசையையும் அடக்கி வைத்துக்கொண்டு, வெளியிலே இப்படி சொல்லி நடப்பார்கள்.ஒரு நாளிலே தேவசித்தமே முன்னால் வந்து முழுமையாக நிற்கும்போது ***ஜகா*** வாங்குவார்கள். ஹலோ! பிரதர்ஸ்....சிஸ்டர்ஸ்.. தேவசித்தம் செய்வது என்பது அத்தனை எளிதல்ல. ஆனால் துணிந்து செய்ய முன் வருபவர்களுக்கு அவர் செய்கிற காரியம் ஒருவனுடைய புத்திக்கு எட்டாததும், எண்ணிமுடியாத அதிசயமாயிருக்கும்!

**இப்போ போடுங்க ஒரு அல்லேலூயா!**

# சகோதரிகள் பகுதி



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த மாதத்தின் தொடர்ச்சியாக மீண்டும் இயேசுவின் தாய் **மரியாளைக்** குறித்து தொடர்ந்து தியானிப்போம். **கிருபை** என்பது தகுதியில்லாதவர்களுக்கு கொடுக்கப்படுவதுதான். ஆனாலும் அந்த கிருபைக்கும் ஒரு விலை உண்டு. அதுதான் **தாழ்மை.** வேதம் சொல்லுகிறது **தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கப்படும்.** பாவத்தை மேற்கொள்ளவும், பாவம் செய்யாமலிருக்கவுமே நமக்கு கிருபை அளிக்கப்படுகிறது (ரோமர் 6 .14,15).

தொடர்ந்து தேவதூதன் மரியாளை நோக்கி இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசுஎன்று பேரிடுவாயாக என்றான். அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.தனது கர்ப்பத்தில் உன்னதமானவருடைய குமாரன் பிறக்கப்போகிறார் என்று தூதன்மூலம் சொல்லக் கேட்ட மரியாள் ஒரு சரியான நியாயமான கேள்வியை தூதனிடம் கேட்டாள்.இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

ஏனென்றால் அவள் திருமணத்தை எதிர்பார்த்து சந்தோஷ மகிழ்ச்சியில் இருக்கும்போது திருமணத்திற்கு முன் கர்ப்பம் தரிப்பாய் என்ற செய்தி அவளுக்கு மிகவும் அதிர்ச்சியாக, கலக்கமாக இருந்திருக்கும்.கன்னிமையின் காலத்தில் அனுபவிக்க வேண்டிய அவமானம், நிந்தை, பரிகாசம், புருஷனுடைய சந்தேகமெல்லாம் அவள் மனதை வாட்டியிருக்கும். திருமணத்திற்கு முன்பு கர்ப்பம் தரிப்பது என்பது மிகப்பெரிய பாவச்செயல். தனக்கு இனி திருமணம் ஆகுமா? என்ற பயம் சூழ்ந்திருக்கும்.இப்படிப்பட்ட குழப்பமான, வேதனையான சூழ்நிலையில்தான் மரியாள் காணப்பட்டாள்.

தேவதூதன் அவளுக்கு பிரதியுத்தரமாக, பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது **தேவனுடைய குமாரன்** என்னப்படும்.இதற்கு பின்பு மரியாளுடைய வாழ்க்கையில் வரப்போகிற நிந்தைகள், அவமானங்கள், வேதனைகள் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளத்தான் தேவனிடத்திலிருந்து கிருபை வந்தது.

தன்னை முற்றிலுமாய் தேவனுக்கு அர்ப்பணித்தபடியினால் இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை என்றும் உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றும் சொல்ல முடிந்தது. தேவனுக்காக எதையும் சந்திக்க எந்த சூழ்நிலைகளையும் எதிர்கொள்ள மரியாள் ஆயத்தமாகி விட்டாள்.அந்த நேரமே தேவதிட்டம் தன்னில் பரிபூரணமாக நிறைவேற தன்னை முழுவதுமாக ஒப்படைத்துவிட்டாள்.

அருமையானவர்களே,இங்கே தேவனுடைய திட்டம் மரியாளுக்குள் நிறைவேற மரியாளுடைய தாழ்மையும் அர்ப்பணிப்பும் மிகவும் அவசியமாயிருந்தது. பிதா தாமே தம்முடைய ஆதீனத்தில் வைத்திருந்த திட்டத்தை நிறைவேற்றுகிறார். பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய (தேவன்) பலம் உன்மேல் நிழலிடும்; உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தம் தேவனுடைய குமாரன் என்னப்படும். இங்கே மூவொரு தெய்வமாய் மரியாளிடத்தில் பிரசன்னமாகிறதைக் காண்கிறோம். கெட்டுப்போன முழு மனுக் குலத்தையும்

இரட்சிக்கும்படியான தமது ஆதீன திட்டத்தை தேவன் மரியாள் மூலம் நிறைவேற்றுகிறார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, மரியாளுக்கு மாத்திரமல்ல. இதுவே அனுக்கிரகத்தின் காலம் இன்றே இரட்சணியத்தின் நாள் என்று சொல்லப்படுகிற இன்றைய நாட்களில் தேவனுடைய கிருபை நம் ஒவ்வொருவரையும் சந்திக்கிறது. நம் நிலை என்ன? கிருபையினால்தான் தேவனிடத்திலிருந்து இரட்சிப்பு நம் ஒவ்வொருவருக்கும் இலவசமாய் கிடைக்கிறது. ஆனால் அநேகர் பொய்யான மாயைகளை, பாரம்பரியங்களைப் பற்றிக் கொண்டு இந்த கிருபையை போக்கடிக்கிறார்கள். விலையேறப்பெற்ற இந்த இரட்சிப்பை அசட்டை பண்ணுகிறார்கள்.

அருமையானவர்களே, வேதம் சொல்லுகிறது அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும்,தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் (எபி 2 : 4). ஆகவே இரட்சிப்பை பெற்றுக்கொண்ட நாம் அதின் மேன்மையை, மகிமையை, கனத்தை



அறிந்து கொண்டு இந்த இரட்சிப்பு நம்மில் பூரணமாய் நிறைவேற மிகுந்த பிரயாசப்படுகிறவர்களாய் காணப்படுவோம்.

அடுத்து, மரியாள் தன் இனத்தாரைக் குறித்து கரிசனை உள்ளவளாய் இருந்தாள். இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர் வயதிலே ஒரு புத்திரனை கர்ப்பம் தரித்திருக்கிறாள் மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம் என்று சொல்லப்பட்ட வார்த்தையை கேட்டாள் . உடனே மரியாள் எழுந்து, மலை நாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்கு தீவிரமாய் போய், எலிசபெத்தைக் கண்டு வாழ்த்துகிறாள். மரியாளும் எலிசபெத்தும் தேவனை துதித்துப் பாடினார்கள் என்று பார்க்கிறோம். இளம் வயது வாலிப பெண், யூதா மலை மேலுள்ள ஒரு பட்டணம். மலை மேல் ஏறிச்செல்வது என்பது, எந்தவித பிரயாண வசதியும் இல்லாத அந்த நாட்களில் எவ்வளவு கடினமானது! அதுவும் தீவிரித்துப் போகிறாள். செய்தியை கேட்ட மாத்திரத்தில் எந்தவித தாமதமும் இல்லாமல் உடனடியாக புறப்பட்டு போகிறாள். முதிர்வயதில் கர்ப்பம் தரித்திருக்கிற எலிசபெத்தை வாழ்த்தும்படி, கனப்படுத்தும்படி முந்திக்கொள்கிறாள். தான், ஆண்டவருடைய குமாரனை.. சர்வலோகத்தின் தேவனாகிய பிதாவின் குமாரனை சுமந்து கொண்டு செல்கிறோம் என்ற எந்த ஒரு பெருமைக்கும் மேட்டிமைக்கும் இடம் கொடாமல் மிகுந்த மனத்தாழ்மையோடு... நான் ஆண்டவருக்கு அடிமை என்ற சிந்தையோடு எலிசபெத்திடம் சென்று, குழந்தையை வாழ்த்துகிறாள். இந்த வாழ்த்துலை கேட்ட எலிசபெத்தின் வயிற்றிலுள்ள குழந்தை துள்ளியது என்று பார்க்கிறோம்.

அருமையானவர்களே,தேவனுக்கு கீழ்படிந்து,அவருடைய வார்த்தைக்கு செவி கொடுத்து, நாமும் மற்றவர்களுக்கு சொல்லுகிற வாழ்த்துதலானாலும், வார்த்தையானாலும் அவர்கள் ஆத்துமாவை குளிரப்பண்ணும்.அந்த வார்த்தை அந்த ஆத்துமாவை தேற்றும்.அவர்கள் உள்ளத்திலே கிரியைச் செய்யும். அந்த ஆத்துமாவை உயிர்ப்பிக்கும்.

தேவனுடைய விலையேறப்பெற்ற இரட்சிப்பை பெற்றுக்கொண்ட நாம் நம் இனம்,சொந்த பந்தங்களைக் குறித்து, அவர்கள் இரட்சிப்பைக் குறித்து எந்த அளவு பாரப்படுகிறோம்? எந்த அளவு பிரயாசம் எடுக்கிறோம்? இங்கே மரியாள் தேவசித்தத்திற்கு தன்னை பரிபூரணமாய் ஒப்புக்கொடுத்ததினால் **என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனுக்குள் (இயேசு) களிகூருகிறது.**என்று துதித்து பாடமுடிந்தது. நாமும் ஆத்தும பாரம் உடையவர்களாய் தேவசித்தத்தை நிறைவேற்றுவோமானால்.... ஒவ்வொரு நாளும் தேவனுக்கு புதுப்பாட்டை பாடி துதித்து மகிமையின் மேல் மகிமை அடைந்து மறுரூபமாக முடியும்.

**வேதத்தில் காணும் பாத்திரமெல்லாம் இயேசுவை போற்றிடுதே**
**என்னையும் அவ்வித பாத்திரமாய் வனைந்து கொள்ளுமே .**

நாமும் மரியாளைப் போல தாழ்மையோடு கர்த்தரின் கரத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போம்.கர்த்தர் நம்மையும் தேவனுக்குகந்த பாத்திரமாய் ***உடைத்து உருவாக்குவார் .... உருமாற்றுவார்.***

சகோதரி : **லீமா போஸ்கோ**




# தனிமை

இன்றைய உலகில் எல்லா வயதினரும் தனிமையை எதிர்கொள்கின்றனர். ஆனால் வாலிபர்களிடையே இது மிகவும் அதிகமாக காணப்படுகிறது.

இன்று தனிமையிலிருந்து தப்பிக்க வாலிபர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். முதலாவதாக சமூக ஊடகங்கள் அதற்கு பெரும் பங்களிப்பு அளிக்கிறது. Face Book, Instagram, Whats APP, போன்ற செயலியில் தாங்கள் செய்யும் அனைத்தையும் பற்றி ட்விட் செய்கிறார்கள். ( உண்பது, உட்காருவது, தூங்குவது என்று). இன்னும் சிலர் Tinder போன்ற டேட்டிங் ஆப்சன் மூலம் தனிமையை போக்க முயல்கிறார்கள். மற்ற சிலர் திரைப்படங்கள், பாடல்கள் என தனிமையிலிருந்து விடுபட முயற்சிக்கிறார்கள்

இத்தனை முயற்சிகள் எடுத்தாலும் தனிமை விடுவதில்லை. தன்னைச் சுற்றி பலர் சூழ்ந்திருந்தாலும் தனிமையை உணருகிற சில நேரங்கள் உண்டு. தனியாக இருப்பதும் தனிமையாக இருப்பதும் வேறு. சில நேரங்களில் தனிமையில் இருப்பது நல்லது. நாம் ஒவ்வொருவரும் தங்கள் நாளின் சில 'Me Time' எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் தனிமையாக இருப்பது நல்லதல்ல. இயல்பாகவே அனைவரும் , தனிமையில் , ஒரு வெறுமையில் தெய்வத்தை தேடி ஓடுவோம். விசுவாசியாகிய நம்மை அது இயேசுவிடம் நெருங்கச் செய்யும் . வேதாகமத்திலும் நாம் சில தேவமனிதர்கள் தனிமையாக இருப்பதை பார்க்க முடியும். அதில் சில எடுத்துக்காட்டுகள்.

தாவீது சவுலை விட்டு ஓடிப்போய் வலப்புறம் பார்த்து, பார் என்னை கவனிக்கிறவன் ஒருவனுமில்லை; எனக்கு எந்த அடைக்கலமும் இல்லை, என் ஆத்துமாவை குறித்து ஒருவனும் கவலைப்படுவதில்லை (சங்142 : 4). என்று எழுதுகிறார். இயேசு சிலுவையில் உண்மையான தனிமையை அனுபவித்தார். பல பார்வையாளர்கள் அவர் இறப்பதை பார்த்தனர். அவருடைய இடத்தை பிடிக்கவோ வரப்போகிற துன்பத்தை பகிர்ந்து கொள்ளவோ யாராலும் முடியாது. அவரை சுற்றியிருந்தவர்களின் எண்ணிக்கை அவரது தனிமையை அதிகப்படுத்தியது. உன்னுடைய ,என்னுடைய பாவத்தின் அகோரம் பிதாவின் முகத்தை அவருக்கு மறைத்தது.

1இராஜா 19 : 4 – யேசபேலிடமிருந்து தப்பியோடிய எலியாவின் மனநிலையை விவரிக்கிறது. அவர் போதும் கர்த்தாவே என்று சொல்லி தன் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்படி கர்த்தரிடம் வேண்டுகிறார். தனிமை...பயம் ...நான் ஒருவன் மாத்திரம்.... என்ற அங்கலாய்ப்பு...நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவனல்ல என்ற அவரது விரக்தியானது தனிமையில் இருப்பவர்கள், சோர்ந்து போயிருப்பவர்கள் அடிக்கடி உணரும் மனதின் எதிரொலியாயிருக்கிறது. வாழ்கையில் நாம் அனைவரும் விரும்புவது இதுதான் அல்லவா ! நாம் மற்றவர்களால் கொஞ்சம் காணப்பட, அறியப்பட, மற்றும் உண்மையாய் நேசிக்கப்பட வேண்டும் என்பதுதானே !.

நாம் இயேசுவிடம் திரும்பும்போது அவர் உறவுகளை வளர்க்கிறார். விசுவாசத்தை வளர்க்கிறார். மேலும் அவருடைய மகிமைக்காக, அவரது மேலான கிருபையினால் நமக்கு நன்மை செய்கிறவராய் இருக்கிறார். இந்த தனிமையிலிருந்து நாம் முழுமையாக விடுதலை அடைய ஒரே வழி இயேசுவோடுள்ள தனிப்பட்ட உறவை வளர்த்துக்கௌ்வதே !. இயேசுவும் பூமியில் வாழ்ந்த நாட்களில் சீஷர்களை அனுப்பிவிட்டு அவர் தனித்திருந்தார் என்று பார்க்கிறோம். அவர் ஜெபம் பண்ணும்படி மலையின் மேல் ஏறி தனித்திருந்தார் என்று வாசிக்கிறோம். ( லூக்கா 5 ) ஆனாலும் இயேசு சொல்லுகிறார் நான் தனித்திரேன் பிதாவுக்கு பிரியமானவைகளை நான் செய்கிறபடியால் அவர் என்னை தனித்து விடுகிறதில்லை என்கிறார்.

ஆகவே நாம் தனிமையிலிருந்து விடுபடுவது எளிது. அதற்கு நாம் செய்ய வேண்டியது,

1. ஆண்டவரிடம் தனிப்பட்ட உறவை கொண்டிருக்க வேண்டும், மற்றும் அவருக்கு சொந்தமானவர்களாக இருக்க வேண்டும். இயேசு தம்முடைய சீடர்களிடம் வந்தார். ஏனெனில் அவர்கள் அவருக்கு சொந்தமானவர்கள். அவர்களிடம் பேசினார், கட்டளையிட்டார், வாக்குறிதி அளித்தார். நேசித்தார், வழிநடத்தினார். நாமும் இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது , அவர் நம்மிடம் வருவார், பேசுவார், அதிகம் நேசித்து வழிநடத்துவார். நம் தனிமையை முற்றிலுமாய் நீக்குவார்.
2. சபை கூடுதலை விட்டுவிடாதீர்கள் என்று வேதம் சொல்லுகிறது. கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாய் ஒருவருக்கொருவர் சார்ந்திருப்பதும், ஐக்கியமாயிருப்பதும் அவசியம். மத் 18 : 20 ல் சொல்லியிருக்கிறபடியே இரண்டு பேராவது , மூன்று பேராவது , என் நாமத்தினாலே கூடினால் அங்கே அவர் நம் நடுவிலே இருப்பார். எனவே அவரது பிரசன்னத்தில் வரும்போது தனிமை அன்பாக மாற்றப்படுகிறது. பிரிவினை கூடுகையாக மாறறப்படுகிறது.
3. சுவிசேஷத்தை போதிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இது இயேசுவின் கட்டளை. அனைவருமே தங்கள் தனிமையை யாரேனும் அகற்றிவிட காத்திருக்கிறார்கள். அதனால் அவருடைய இரட்சிப்பு மற்றும் அன்பைப் பற்றி வேறொருவருக்கு அறவித்தால் நமது தனிமை நம்மைவிட்டு நீங்கும். நம் தேவனும் நம்மிலே மகிமைப்படுவார்.

தனிமையிலிருந்து முழுமையாக தப்பிக்க வழி இயேசுவே. அவர் இல்லாமல் உண்மையான தோழமைக்காக, உறவுக்காக ஆறுதலுக்காக உங்கள் வாழ்நாள் முழுவதும் தேடுவீர்கள். ஆனால் அதை ஒருபோதும் கண்டு பிடிக்க முடியாது. முடிவாக , தனிமையில் நாம் நினைவு கொள்ள வேண்டிய வசனம் (மத் 28 :20) இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன். ஆண்டவர் நம் அனைவரோடும் எப்பொழுதும் என்றென்றைக்கும் இருக்கிறார். அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை . ஆமென் .

**Sharons** *( Mumbai )*




## கவனியுங்கள்

கடந்த மாதம் 26 பேர் எழுதியதில் 24 பேர் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள். நல்லது. தொடர்ந்து மற்றவர்களுக்கும் இந்தப் பகுதியை அறிமுகம் செய்து, வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

## வேத பகுதி

### எண்ணாகமம் : 6 முதல் 10 வரை

1.திராட்ச ரசம் - சவரன் கத்தி -பிரேதம், இவைகளெல்லாம் எதைப் பற்றி குறிக்கிறது?

2.சபை கூடிவர வெள்ளிப்பூரிகைகள் எத்தனை ஊத வேண்டும்?

3.பெருந்தொனியின் அவசியம் என்ன?

4.சபை கூடுதல் - பிரயாணம்- ஊதுதல் -பெருந்தொனி இவைகளில் உங்களுக்கு வெளிப்படுகிற ஆவிக்குரிய வெளிப்பாட்டை எழுதுக (10 :2-7).

5.லேவியரில் ஆசரிப்பு கூடாரத்தின் பணி விடைகள் செய்ய வயது வரம்பு என்ன?

6.இஸ்ரவேல் புத்திரரில் முதற்பேறு
(i).லேவியருடையது.(ii). ஆரோனுடையது.
(iii).கர்த்தருடையது - சரியானதை எழுதவும்.

7.ஆசரிப்புக் கூடாரத்திற்குள் கர்த்தர் மோசேயிடம் எங்கேயிருந்து பேசினார்?

8. ஆசரிப்புக் கூடாரத்தில் விளக்குகளின் எண்ணிக்கை எத்தனை?

9.பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்ட நாளின் முதல் நாளில் எந்த கோத்திரம் காணிக்கை செலுத்தியது?

10.காத் சந்ததியாரின் கோத்திரத்தின் சேனைக்கு தலைவர் யார் ?

## கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1.சரஸ்வதி தேவராஜ் (எக்மோர்).
2.ரோஸி வினோத் (காமராஜ் நகர்)
3.கீதா தினேஷ் (பொத்தூர்).
4.லீலா ஜெயபால் (காமராஜ் நகர்).
5.சுகந்தி (அயப்பாக்கம்).
6.Dr.இவான்ஜலின் ஜோன்ஸ் (சேலம்).
7.டாரிஸ் பிலோமினா (ரெட்ஹில்ஸ்).
8.மஹா (வேப்பம்பட்டு).
9.ஹெப்சி கிரி (காமராஜ் நகர்).
10.எலிசபெத் சாலொமோன்(கன்னிகாபுரம் ).
11. கிரேஸி ஜார்ஜ் (வெள்ளானூர்).
12.ரீனா சங்கீத் (வெள்ளானூர்).
13.எஸ்தர் (வெள்ளானூர்).
14 .ஜெசி (வெள்ளானூர்).
15.பிரியா ஜாஸ்மின் (வெள்ளானூர்).
16.பவானி (வெள்ளானூர்).
17.ராகேல் ஜீவிதா (வெள்ளானூர்).
18.பிரீத்தி (வெள்ளானூர்).
19. மதுமிதா(வெள்ளானூர்).
20. டாலி தாமஸ் (வெள்ளானூர்).
21.பூஜா ரூபநாதன் (வெள்ளானூர்).
22.மோனிகா (வெள்ளானூர்).
23.ஜென்சி பூஜா (வெள்ளானூர்).
24.செல்வம் ஜெயராஜ் (பிலாய்).

**பரிசு பெற்றவர் : டாரீஸ் பிலோமினா**

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 28 - 3 - 2023.**